<u>**முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்**</u>

**அ.சா.3–** கலிலூர்ரஹ்மான் **SPL.CC.No.26/2025** **நாள் 24.11.2025**

**(எதிரிகள் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை தொடர்ச்சி**</u>

பிறகு DSP சார் காவலர் ஜெகநாதன் என்பவரிடம் இரண்டு பிளாஸ்டிக் டம்ளர்களில் சோடியம் கார்பனைட் கரைசல் தயார் செய்ய சொன்னார். கரைசல் தயார் செய்த பின்னர் சரவணனிடம் அவரது வலது கை விரல்களை அந்த ஒரு டம்ளரில் இருந்த கரைசலில் நனைக்க சொன்னார். சரவணனும் அவ்வாறே கை விரல்களை நனைத்தார். அப்போது அந்த கரைசல் இளஞ்சிகப்பு நிறமாக மாறியது. பின்னர் அந்த கரைசலை 180 மி.லி. அளவிலான ஒரு கண்ணாடி பாட்டிலில் ஊற்றி மூடி போட்டு மூடி துணி வைத்து நூல் போட்டு காவலர் கட்டினார். அந்த கண்ணாடி பாட்டிலில் ஒரு லேபிள் ஒட்டப்பட்டது. அந்த லேபிளில் வழக்கின் விவரம், சரவணன் பெயர் மற்றும் வலது கை விரல்கள் என்பதை குறிக்க R என்று எழுதப்பட்டது. அந்த லேபிளில் நான் மற்றொரு அலுவல் சாட்சியான ராஜகோபால், DSP சார், சரவணன் ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம். மற்றொரு டம்ளரில் இருந்த கரைசலில் சரவணின் இடது கை விரல்களை அந்த ஒரு டம்ளரில் இருந்த கரைசலில் நனைக்க சொன்னார். சரவணனும் அவ்வாறே கை விரல்களை நனைத்தார். அப்போது அந்த கரைசல் இளஞ்சிகப்பு நிறமாக மாறியது. பின்னர் அந்த கரைசலை 180 மி.லி. அளவிலான ஒரு கண்ணாடி பாட்டிலில் ஊற்றி மூடி போட்டு மூடி துணி வைத்து நூல் போட்டு காவலர் கட்டினார். அந்த கண்ணாடி பாட்டிலில் ஒரு லேபில் ஒட்டப்பட்டது. அந்த லேபிளில் வழக்கின் விவரம், சரவணன் பெயர் மற்றும் இடது கை விரல்கள் என்பதை குறிக்க L என்று குறியீடு செய்யப்பட்டது. அந்த லேபிளிலும், நான் மற்றொரு அலுவல் சாட்சியான ராஜகோபால், DSP சார், சரவணன் ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம். அந்த பாட்டில்கள் வலது கை கரைசல் R **சா.பொ.2,** ஆகவும் வலது கை கரைசல் L **சா.பொ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றது. சா.பொ.2, 3 ஆகியவற்றிலுள்ள லேபிள்களில் என்னுடைய கையொப்பம் உள்ளதை என்னால் அடையாளம் காட்ட முடியும். அவை தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது ஆகும். பின்னர் DSP சார்

காரணம் கூறி சரவணனை மாலை சுமார் 06.30 மணியளவில் எங்கள் முன்னால் கைது செய்து விசாரணை செய்தார். பின்னர் DSP சார் சரவணனிடம் தர்மலிங்கத்திடம் வாங்கிய பணம் எங்கே என்று கேட்டார். சரவணன் தன்னுடைய நீல நிற ஜீன்ஸ் பேண்ட்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து கொடுத்தார். அதை DSP சார் மற்றொரு அலுவல் சாட்சியான ராஜகோபாலை எண்ணி பார்க்கும்படி சொன்னார். அவரும் எண்ணிபார்த்துவிட்டு இருபது 500 ரூபாய் தாள்கள் இருப்பதாக சொன்னார். DSP சார் ஏற்கனவே அலுவலகத்தில் தயார் செய்திருந்த ஒப்படைப்பு மகசரில் உள்ள ரூபாய் தாள்களின் எண்களோடு ஒப்பிட்டு சரிபார்க்க சொன்னார். நாங்களும் ஒப்பிட்டு சரிபார்த்துவிட்டு ரூபாய் நோட்டுகளின் எண்கள் சரியாக இருப்பதாக சொன்னோம். அந்த இருபது 500/- ரூபாய் நோட்டுகள் தான் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுவது ஆகும். அது ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் DSP சார் சரவணனை சோதனை செய்தார். அப்பொழுது சரவணனின் பேண்ட்டின் இடது மேல் பாக்கெட்டில் ஒரு 7,500/- ரூபாய் தனியாகவும், ஒரு கருப்பு நிற பர்சில் 10,500/- ரூபாய் தனியாகவும் மேல் இடது பக்க சட்டை பாக்கெட்டில் 950/- ரூபாய் பணமும் இருந்தது. அந்த தொகைகள் பற்றி DSP சார் சரவணனிடம் விசாரித்தபோது 950/- ரூபாய் தன்னுடைய சொந்த பணம் என்று சொன்னார். மற்ற தொகைகளுக்கு அவரால் தகுந்த காரணமும், பதிலும் சொல்ல முடியவில்லை. அந்த பணமும் லஞ்ச பணமாக இருக்கும் என்று DSP சார் சந்தேகப்பட்டு அதனை கைப்பற்றினார். DSP சார் சரவணனுக்கு ஒரு மாற்று துணி கொடுத்துவிட்டு அவர் அணிந்திருந்த பேண்ட்டை கழட்டி கொடுக்கும்படி சொன்னார். ஆண் காவலர் ஜெகநாதன் மற்றொரு டம்ளரில் சோடியம் கார்பனைட் கரைசல் தயார் செய்தார். அந்த டம்ளரில் இருந்த கரைசலில் சரவணின் பேண்ட்டின் வலது பாக்கெட்டின் உள்பகுதியை ஜெகநாதனை நனைக்க சொன்னார். அவ்வாறே ஜெகநாதனும் செய்தார். அப்போது அந்த கரைசல் இளஞ்சிகப்பு நிறமாக மாறியது. பின்னர் அந்த கரைசலை 180 மி.லி. அளவிலான ஒரு கண்ணாடி பாட்டிலில் ஊற்றி மூடி போட்டு மூடி துணி வைத்து நூல் போட்டு காவலர் கட்டினார். அந்த கண்ணாடி பாட்டிலில் ஒரு லேபிள் ஒட்டப்பட்டது. அந்த லேபிளில் வழக்கின் விவரம், சரவணன் பெயர் மற்றும்

சரவணனின் பேண்ட் கரைசல் என்பதை குறிக்க P என்று குறியீடு செய்யப்பட்டது. அந்த லேபிளிலும், நான் மற்றொரு அலுவல் சாட்சியான ராஜகோபால், DSP சார், சரவணன் ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம். அந்த பாட்டில் பேண்ட் கரைசல் P என குறியீடு செய்யப்பட்டது **சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. தற்போது என்னிடம் காட்டப்படும் பாட்டிலில் ஒட்டப்பட்டுள்ள லேபிளில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **DSP** சார் மூன்று கரைசல்கள் அடங்கிய பாட்டில்கள், கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஜீன்ஸ் பேண்ட்டை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். அந்த ஜீன்ஸ் பேண்ட் தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது. அது **சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. DSP சார் சரவணனை விசாரித்து எதற்காக தர்மலிங்கத்திடமிருந்து பணம் கேட்டு வாங்கினீர்கள் என கேட்டு விசாரித்தார். அதற்கு சரவணன் தக்கல் முறையில் தர்மலிங்கத்திற்கு இலவச மின்சாரம் கொடுப்பதற்கு AE ராஜீவ்காந்தி என்பவர் பணத்தை வாங்கி வைக்கும்படி சொன்னதாகவும், அதன்பேரில் தான் பணத்தை தர்மலிங்கத்திடமிருந்து வாங்கி வைத்ததாகவும் சொன்னார். DSP சரவரணன், நான், மற்றொரு அலுவல் சாட்சி ராஜகோபால் மற்றும் விஜிலென்ஸ் டீமை அழைத்துக்கொண்டு ராஜீவ்காந்தியின் சொந்த ஊரான தண்டலை கிராமத்திற்கு போனோம். தண்டலை போகும் வழியில் கல்லாத்தூர் மெயின் ரோட்டில் சொசைட்டிக்கு பக்கத்தில் ராஜீவ்காந்தி நின்றுகொண்டிருப்பதாக சரவணன் DSP யிடம் அடையாளம் காட்டினார். பிறகு நாங்களும் DSP சாரும் வண்டியிலிருந்து இறங்கி ராஜீவ்காந்தியிடம் காரணத்தை கூறி அவரை கைது செய்தோம். அப்போது இரவு 08.00 மணியிருக்கும். பின்னர் ராஜீவ்காந்தியையும் அழைத்துகொண்டு நாங்கள் எல்லோரும் சுத்தமல்லி EB ஆபிசுக்கு போனோம். EB ஆபிசில் வைத்து ராஜீவ்காந்தியை DSP விசாரித்தார். ராஜீவ்காந்தியிடம் DSP தர்மலிங்கம் தக்கல் முறையில் மின்சாரம் கேட்டு கொடுத்ததற்கான File ஐ கேட்டார். அங்கு இருந்த AE சாந்தி என்பவர் அந்த கோப்பு விவரத்தை சொல்லி, அந்த கோப்பு மற்றும் இதர 6 ஆவணங்களை DSP யிடம் கொடுத்தார். ராஜீவ்காந்தியிடம் DSP இன்று சனிக்கிழமை ஆயிற்றே வேலை செய்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு ராஜீவ்காந்தி DSP யிடம் சீனியர் இன்சினியர் கொடுத்த ஒரு கடிதத்தை காட்டி அதன்படி அன்று

வேலை செய்வதாக சொன்னார். அந்த EB ஆபிசில் வைத்து 6 ஆவணங்களுக்காகவும் மற்றும் பொருட்களை கைப்பற்றியதற்காகவும் ஒரு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். அந்த மகசர் தான் தற்போது என்னிடம் காட்டப்படுவதாகும். அந்த மகசரில் DSP சார், நான், மற்றொரு அலுவல் சாட்சி ராஜகோபால், AE சாந்தி மேடம், EB ஆபிசிலிருந்த வணிக ஆய்வாளர் சித்ரா, ராஜீவ்காந்தி, சரவணன் ஆகியோர் கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசரின் நகலை சரவணனிடமும், ராஜீவ்காந்தியிடமும் ஆய்வாளர் கொடுத்து, அவர்களிடம் அதற்காக கையெழுத்து வாங்கினார். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. அவ்வாறு EB அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் என்ன என்ன என்று கேட்டால் ஒரு சிலது ஞாபகம் இருக்கிறது. மற்ற படி அந்த Register களை பார்த்தால் என்னால் கூறமுடியும். Attendance Register, தக்கல் முறையில் பணி ஒதுக்கீடு ஆணை Register, திட்ட மதிப்பீடு Register ஆகியவை எனக்கு ஞாபகத்தில் உள்ளது. இரவு 11.00 மணி முதல் 11.45 மணிவரை DSP சார் சம்பவ இடத்தை பார்வையிட்டு, Location பற்றி ஒரு வரைபடமும், மகசரும் தயார் செய்தார். அந்த பார்வை மகசரில் DSP சார், நான், மற்றொரு அலுவல் சாட்சி ராஜகோபால் ஆகியோர் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. அதன் பிறகு எங்களை DSP போகச்சொல்லிவிட்டார். சுமார் 4 மாதம் கழித்து என்னை DSP அலுவலகத்திற்க வரச்சொல்லி Inspector விசாரித்தார். எங்களிடம் Statement வாங்கிக்கொண்டார்கள்.

**எதிரிகளி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. ஏற்கனவே அ.சா.2 உடன் இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்யப்படுவதாக தங்களால் சொல்லப்பட்டதாக எதிரி தரப்பு வழக்கறிஞர் சொன்னார்.**

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.